**கூடுதல் சார்பு நீதிமன்றம், திருப்பூர்.**

**OS.No. 324/2024**

திருமதி.லட்சுமி (P.W. –1) **14.11.2025**

**<u>சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை :</u>**

சாட்சி ஆஜர். சாட்சி சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டார்.

1. எழுத படிக்க தெரியுமா என்றால் தெரியாது. நான் எம்.ஏ.நகரில் உள்ள மனை எண்.384, 1350 சதுர அடிகள் கொண்ட சொத்தை 17.058.2023ம் தேதி பிரதிவாதிக்கு கிரயம் செய்து கொடுத்தேன் என்றால் சரி. அதற்கு கிரையத் தொகையாக 8 லட்சம் ரூபாய் பெற்றுக் கொண்டேன் என்றால் தவறு. காசோலையாக ரூ.6,30,000/– கொடுத்தார். அதன் பிறகு 70 ஆயிரம் கொடுத்தார். அந்த தொகை என்னுடைய கணக்கில் வரவுக்கு வந்துவிட்டது.

2. அதன் பிறகு 6.9.2024 ஆம் தேதி வழக்கு தாக்கல் செய்தேன் என்றால் சரி. ஒரு வருடத்திற்குள் பிரதிவாதி எனக்கு பாக்கி பணம் தர வேண்டி உள்ளது என்பதை பொறுத்து வழக்கறிஞர் அறிவிப்பு எதுவும் அனுப்பவில்லை என்றால் தவறு அனுப்பினேன். தவறாக சாட்சியம் அளிக்கிறேன். அம்மாதிரி அறிவிப்பு வரவில்லை என்றால் சரியல்ல. பிரதிவாதியிடம் இருந்து எந்த தொகையும் எனக்கு வர வேண்டியது இல்லை. முழு கிரைய தொகையும் பெற்றுக் கொண்டுதான் கிரயம் செய்து கொடுத்தேன் என்றால் தவறு. ஒரு வருடத்திற்கு பிறகு விற்பனை செய்யப்பட்ட சொத்து அதிகம் ஆகிவிட்டதால் மேலும் தொகை பெற வேண்டி பொய் வழக்கு தாக்கல் செய்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் தவறு.

3. தாவாவில் சொல்லி உள்ளவாறு பிரதிவாதிக்கு கிரயம் செய்து கொடுத்ததாக சொல்லும் சொத்திற்கு எந்த ஒரு கிரைய தொகையையும்

பிரதிவாதி செலுத்த பொய் என்றால் தவறு. மனிதாபிமான அடிப்படையில் சிறுசிறு தொகைகளை செய்ய பிரதிவாதி தயாராக கொடுத்திருப்பார், தாவாவில் சொல்லி உள்ளவாறு அவ்வளவு பெரிய தொகை எதுவும் பிரதிவாதி எனக்கு தர வேண்டிய அவசியம் இல்லை என்றால் தவறு.

4. வா.சா.ஆ–1 அசல் பிரதிவாதியிடம் இல்லை என்றால் தவறு.அதில் குறிப்பிட்டுள்ள கிரைய தொகை தவறு. வழக்கிற்காக ஏற்படுத்தப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. வா.சா.ஆ–1 ல் யார் சாட்சி கையப்பம் செய்துள்ளார்கள் என்றால் என்னுடைய மகன் மற்றும் என் நண்பரின் மகன் சாட்சியாக கையொப்பம் செய்துள்ளார். என் மகன் தர்மன். இன்னொருவர் என் நண்பரின் மகன் கதிர். வா.சா.ஆ–1 அவனுத்தை யார் தயார் செய்தார்கள் என்றால் விஜயகுமார் என்று ஒருவர் வந்தார் அவர் தான் எல்லாம் செய்தார்.

5. முத்திரைதாள் யார் பேரில் வாங்கப்பட்டுள்ளது என்று எனக்கு தெரியாது என்றால் என் பெயரில் தான் வாங்கப்பட்டது. வா.சா.ஆ–1 முதல் விசாரணையில் சொல்லி உள்ளது அடிப்படையில் தயார் செய்யப்படவில்லை. தவறாக கூறுகிறேன் என்றால் சரியல்ல. அம்மாதிரி கிரையமே பேசவில்லை. அதில் குறிப்பிடப்பட்டிருக்கும் கிரய தொகையை தவறு. வழக்கிற்காக அந்த ஆவணத்தை தயார் செய்து உள்ளீர்கள் என்றால் சரியல்ல.

6. வா.சா.ஆ–1 ல் குறிப்பிட்டுள்ளவாறு கிரையத்தொகை பேசப்பட்டிருந்தால் அந்த சொத்தை நான் குறைந்த விலைக்கு பிரதிவாதிக்கு கிரயமே செய்திருக்க மாட்டேன் என்றால் தவறு. சாட்சி தன்னிச்சையாக முன்வந்து நான்கு நாட்களில் தாவாவில் குறிப்பிட்டுள்ள தொகையை தருவதாக சொன்னார். அதனால் கிரயம் செய்து கொடுத்தேன் என்று கூறுகிறார்.

7. தாவாவில் குறிப்பிட்டுள்ள தொகை எதுவும் பிரதிவாதி தர வேண்டியது இல்லை. சரியான கிரையை தொகை செலுத்தி தான் அவர் என்னுடைய

சொத்தை கிரயம் பெற்றார் என்றால் தவறு. வா.சா.ஆ–4 ஐ போல் எத்தனை காசோலைகள் என்னிடம் உள்ளது என்றால் நான்கு காசோலையில் உள்ளது. வா.சா.ஆ–4 ஐ தவிர இன்னும் மூன்று காசோலைகள் உள்ளது என்றால் இரண்டு காசோலைகள் நிரப்பப்பட்டு உள்ளது. காசோலை ஒன்று வங்கியில் தாக்கல் செய்யப்பட்டு வசூல் ஆகாமல் திரும்பி வந்துள்ளோம். எப்போது வசூலுக்கு தாக்கல் செய்தீர்கள் என்றால் ஒரு வருடம் இருக்கும்.

8. நிரப்பப்பட்ட இரண்டு காசோலைகளை பிரதிவாதி எப்போது கொடுத்தார் என்றால் வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பு நான்காவது மாதம் 2023 ஆம் வருடம் கொடுத்தார். வா.சா.ஆ–4 2023 ஆம் வருடம் கொடுத்தாரா என்றால் ஆமாம். அது நிரப்பப்படாமல் இருந்ததா என்றால் ஆமாம். காசோலையை அதன் பிறகு நிரப்பிக் கொண்டீர்களா என்றால் ஆமாம். சில சமயம் காசோலைகளை பிரதிவாதியே எழுதிக் கொடுப்பார். வா.சா.ஆ–4 ல் தேதி நிரப்பப்படாமல் இருந்ததை எனக்குத் தெரிந்தவர்களை வைத்து நிரப்பி வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் தவறு. காசோலை தொகை வசூல் ஆகவில்லை.

9. வா.சா.ஆ–4 ல் குறிப்பிட்டுள்ள தேதியில் காசோலை கொடுக்கப் படவில்லை என்றால் சரி. தாவாவில் சொல்லியுள்ள தேதியில் எந்த ஒரு காசோலையும் பிரதிவாதி எனக்கு கொடுக்கவில்லை என்றால்

சரியல்ல.வா.சா.ஆ–4 காசோலை சட்டப்படி செல்லாது என்றால் சரியல்ல. தாவா தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல. தாவாவில் கோரியுள்ள பரிகாரங்கள் கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

சாட்சியின் கூற்று என் முன்னிலையில் தட்டச்சு செய்யப்பட்டு, படித்துக் காண்பிக்கப்பட்டது. சாட்சி சரியாக உள்ளதென ஒப்புக் கொண்டு கையொப்பமிட்டார்.

K R KANNAN Digitally signed by K R KANNAN Date: 2025.11.14 17:49:10 +0530

கூடுதல் சார்பு நீதிபதி,
திருப்பூர்.